

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட,
தெற்குபால்கிணற்றான்விளை ரூ.3.50 இலட்சம் செலவில் இசக்கியம்மன் கோவிலுக்கு செல்லும் பாதை மற்றும் பாலத்திற்க்குஇன்று (24.07.2016) அடிக்கல் நட்டினார்கள்.
தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி, ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 476/2016 நாள்: 24.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.31.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டிடங்களை இன்று (24.07.2016) திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட, தெற்குபால்கிணற்றான்விளை மாநில நிதி குழு மாநிய திட்டத்தின் கீழ் ரூ.8.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாயநலக்கூட கட்டிடத்தினையும், ரூ.1.50 இலட்சம் செலவில் புதியதாக வைக்கப்பட்ட இருந்த நீர்தேக்கதொட்டியும், ரூ.3.50 இலட்சம் செலவில் இசக்கியம்மன் கோவிலுக்கு செல்லும் பாதை மற்றும் பாலத்திற்க்கு அடிக்கல் நட்டியும், மங்காவிளையில் ரூ.3.50 இலட்சம் செலவில் புதியதாக கட்டபட்ட நியாயவிலைகடையும் திறந்து வைத்தார்.

மேலும், கேசவன்புத்தன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட, பொழிக்கரையில் ரூ.7.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாயநலக்கூட கட்டிடத்தினையும், மணக்குடி ஊராட்சிக்கு உட்பட்ட, கீழமணக்குடியில், ரூ.8.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாயநலக்கூட கட்டிடத்தினையும் திறந்து வைத்தார்கள்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி, திரு. ஐயப்பன், திரு. சந்திரன், திரு. ரதீஸ் ராஜ், திரு. கனகராஜ், பங்குதந்தைகள் நிக்சன், அலோசியஸ் மரிய பென்சிகர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.